**OS NO;215/2010**
**Date:11.12.2019**
**Dw:2(Cross continuation)**
**Name:Vasanthapriya**
**Address:**

2முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

நான் 1ம் பிரதிவாதி மீது தாவா ஐயிட்டம் 1 வீட்டை விட்டு நிர்பந்தப்படுத்தி அனுப்பியதாக கூறியுள்ளதால் இது சம்பந்தமாக புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. சிவில் வழக்கோ அல்லது வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பினோமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குறையில் குறிப்பிட்டுள்ளேனா என்று சொன்னால் வீட்டை விட்டு அனுப்பும் போது நிர்பந்தப்படுத்தியதாக சொல்லவில்லை, 2002 ல் என் திருமணத்திற்காக பணம் கேட்கும் போது தாவா ஐயிட்டம் 1ல் எங்கள் பங்கை எழுதி கொடுத்தால் தான் பணம் ரூ.1,50,000/- தருவதாக சொல்லியும், எங்கள் பங்கை நிர்பந்தப்படுத்தி தான் எழுதி வாங்கினார்கள். இது சம்பந்தமாக எதிர்வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எதிர்வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ரூ1,50,000/- தான் கொடுத்தார்களா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.42 ஆவணத்தில் மூன்றாவது பத்தியில் எங்களது 1வது நபராகிய எம்.சுதேசி குமாரி மகளும், 2வது நபராகிய எம்.வசந்தபிரியா அவர்களின் திருமண செலவிற்காகவும், மற்றும் இதர சில்லரை கடன்களுக்காகவும், பணம் தேவைப்படுவதால் 1ம் பிரதிவாதியிடம் கடனாக ரூ.2,50,000/- பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குறிப்பிட்டுள்ளவாறு நாங்கள் ரூ.2,50,000/- பெறவில்லை, பி.வா.சா.ஆ.41 போடும் போது ரூ.1,50,000/- மட்டும் தான் பெற்றோம். பி.வா.சா.ஆ.41ல் ஏற்பட்ட நாளிலேயே பி.வா.சா.ஆ.42 ஆவணத்தில் எங்களுடைய கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை, கடனும் வாங்கவில்லை. நான் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.41 ஆவணத்தின் படி வற்புறுத்தியதாக இது சம்பந்தமாக போலீசாரிடம் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் புகார் கொடுக்கவில்லை. இதில் சம்பந்தமாக வழக்கறிஞர் நோட்டீஸ் எதுவும் கொடுக்க வில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று

சொன்னால் சரிதான். வாதிகளாகிய எங்கள் அத்தையிடம் என் திருமணத்திற்கு முன் 1ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.41 மூலம் தாவா ஐயிட்டம் 1சொத்தை எழுதி கொடுத்தால் தான் என் திருமணத்திற்கு பொருள்உதவி செய்வார், அதனால் தான் எழுதிக் கொடுத்தோம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோமா என்றால் சொல்லவில்லை, எங்கள் பங்கை எழுதி வாங்கிவிட்டு தான் பணம் கொடுத்ததால் அதைப்பற்றி சொல்லவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் 4வது பாராவில் தாவா ஐயிட்டம் 1 சொத்தை எத்திராஜுலு நாயுடு சேமிப்பு பணத்தை வைத்து தான் வாங்கியுள்ளார் என்று நான் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இதை பற்றி எதிர்வழக்குரையில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே எத்திராஜுலுநாயுடு இறந்து விட்டதால் நான் கூறுவது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல, எத்திராஜுலுநாயுடு சேமிப்பு பணத்தை வைத்து தான் வாங்கினார். எவ்வாறு தெரிய வந்தது என்றால் பாட்டி தான் சொன்னார்.

**(2முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக் கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**